அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006

மேல்நிலை இரண்டாமாண்டு துணைத் தேர்வு, ஜூலை / ஆகஸ்ட் 2022

விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல் மற்றும் மறுகூட்டல்–II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்

செய்திக் குறிப்பு

ஜூலை / ஆகஸ்ட் 2022, மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்வு எழுதி விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்களின் விடைத்தாள் நகலினை **07.09.2022 (புதன் கிழமை) நண்பகல் 12.00 மணி** முதல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்குச் சென்று Notification-ஐ Click செய்தவுடன் **HSE Second Year Exam, JULY / AUGUST- 2022 - Scripts Download"** என்ற வாசகத்தினை "Click" செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாள்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாள்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு **மறுகூட்டல் – II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால்**, இதே இணையதள முகவரியில் "Application for Retotalling / Revaluation" என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர்கள் மேற்படி பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, அதனை **08.09.2022 (வியாழக்கிழமை) முற்பகல் 11.00 மணி முதல் 10.09.2022 (சனிக்கிழமை) வரையிலான நாட்களில் மாலை 5.00 மணிக்குள்** சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

மறுமதிப்பீடு

பாடம் (ஒவ்வொன்றிற்கும்) – ரூ. 505/–

மறுகூட்டல்–II

உயிரியல் பாடம் மட்டும் – ரூ.305/–
ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) – ரூ.205/–

ஒம்/–
இயக்குநர்

நாள் : 05.09.2022.
இடம் : சென்னை – 600 006.